

# அம்மா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





டச் றோட் கேணியடி, மீசாலை மேற்கு மீசாலையைச் சேர்ந்த

## அமரர் பொன்னம்பலம் நல்லம்மா

அவர்கள் இறைபதம் எய்தியமை குறித்து
அவர் நினைவாக வெளியிடப்படும் நினைவு மலர்

# அம்மா...

08.08.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



டச் றோட், கேணியடி, மீசாலை மேற்கு மீசாலையைச் சேர்ந்த

## அமரர் பொன்னம்பலம் நல்லம்மா

அவர்கள் நினைவாக வெளியிடப்படும் நினைவு மலர்

# அம்மா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து
எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி
இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின்
பாதக் கமலங்களுக்கு
இவ் அன்பு மலரினைக் காணிக்கையாகப்
பணிவன்புடனும், பாசத்துடனும்
சமர்ப்பிக்கின்றோம்.



இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் – வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



மலர்வு
02.01.1937

உதிர்வு
10-07-2013

அமரர்

# பொன்னம்பலம் நல்லம்மா

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

மங்களமாம் விஜய ஆனி வளர் துவிதியையில்
பொங்கிய காதலுடன் நல்லம்மா – எங்கும் நிறை
ஈசன் அடி இணைய எல்லாம் பொய்யென்று
தேசம் விட்டுச் சென்ற நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமுறை அமிர்தம்



திருச்சிற்றம்பலம்.

## விநாயகர் துதி

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்து உனக்கு நான் தருவேன் – கோலஞ் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா

ஐந்துகரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகனே வெவ்வினையை வேர் அறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணில் பனிமின் கனிந்து

திகட சக்கரச்செம்முகமட ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம்

அல்லல் போம் வல்வினை போம் அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லை போம் போகாத் துயரம் - நல்ல
குணம் அதிகமாம் அருணை கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்

முன்னவனே! யானை முகத்தவனே! முத்தி நலம்
சென்னவனே! தூய் மெய்ச் சுகத்தவனே! மன்னவனே!
சிற்பரனே! ஐங்கரனே! செஞ்சடையஞ் சேகரனே!
தற்பரனே! நின்தாள் சரண்.

## தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தாண்டகம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவே என் னுறவே என் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண்டுறையுறையும் அமரரேறே.

## திருவாசகம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந்
தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல்
வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரான்என்னைத்
தாங்கிக்கொள்ளே.

## திருவிசைப்பா

ஏகநா யகனே இமயவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசும்நாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருந் தொண்டனார் வணங்கிமகிழ்ந்து எழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர் நேசா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநி பாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகிழ் வழாது பெய்க! மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் கணபதி

இராகம் : கெம்பீரநாட்டை                    தாளம் : ஆதி

ஓம் கணபதி ஓம் கணபதி ஓம்
ஓம் கணபதி ஓம் ஓம் கணபதி ஓம்
ஜெய ஜெய கணபதி ஓம் கணபதி ஓம்
ஜெய ஜெய கணபதி ஓம் கணபதி ஓம்

பிரணவ நாதா                    ஓம் கணபதி ஓம்
பேரரு ளாளா                    ஓம் கணபதி ஓம்
அகர முதல்வா                    ஓம் கணபதி ஓம்
அம்பிகை பாலா                    ஓம் கணபதி ஓம்

ஞானக் கொழுந்தே                    ஓம் கணபதி ஓம்
நந்தியின் மைந்தா                    ஓம் கணபதி ஓம்
வானவர் மணியே                    ஓம் கணபதி ஓம்
மனமணி விளக்கே                    ஓம் கணபதி ஓம்

அங்குச பாசா                    ஓம் கணபதி ஓம்
அன்பரின் நேசா                    ஓம் கணபதி ஓம்
துங்கக் கணேசா                    ஓம் கணபதி ஓம்
சுடர்ப்பிர காசா                    ஓம் கணபதி ஓம்

வேத சொரூபா                    ஓம் கணபதி ஓம்
விக்கின ராசா                    ஓம் கணபதி ஓம்
சோதி நலந்தரும்                    ஓம் கணபதி ஓம்
தும்பியின் முகனே                    ஓம் கணபதி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடராஜா நடராஜா

நடராஜா நடராஜா நர்த்தன சுந்தர நடராஜா
சிவராஜா சிவராஜா சிவகாமி ப்ரிய நடராஜா
நடராஜா நடராஜா ஆனந்தத் தாண்டவ நடராஜா
நடராஜா நடராஜா ஊர்த்துவ தாண்டவ நடராஜா
நடராஜா நடராஜா சிதம்பரேசா நடராஜா
நடராஜா நடராஜா சிற்சபேசா நடராஜா
நடராஜா நடராஜா பன்னகபூக்ஷண நடராஜா
நடராஜா நடராஜா பன்னகபூக்ஷண நடராஜா
நடராஜா நடராஜா சச்சிதானந்த நடராஜா
நடராஜா நடராஜா கனகசபேசா நடராஜா
நடராஜா நடராஜா தில்லைதாண்டவ நடராஜா

கங்கை கொண்டாய் நடராஜா
திங்கள் கொண்டாய் சதாசிவா
மங்கை கொண்டாய் மகேஸ்வரா - என்
மனதில் இருப்பாய் மலைவாசா
பிச்சாண்டி கோலநடராஜா - என்
பித்தம் தீர்ப்பாய் சுகவாசா
சாம்பல் உடலோய் சதாசிவா
சரணம் சரணம் மகாதேவா
நீ ஆடும் ஆட்டத்தில் நடராஜா
அகிலம் மயங்குவது சிவராஜா
சூலம் ஆடுது ஜெகதீசா
டமருகம் முழங்குது சிவராஜா

சரணம் சரணம் சாம்பசிவா
சரணம் சரணம் சதாசிவா
சரணம் சரணம் மலைவாசா
சரணம் சரணம் மகாஈசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத்து நாயகியே

உலகத்து நாயகியே - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி
என்பாதம் சரண்புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி

கலகத் தரக்கர் பலர் - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி
கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி

பலகற்றும் பலகேட்டும் - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி
பயனொன்று மில்லையடி - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி

நிலையெங்கும் காணவில்லை - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி
உன்பாதம்சரண் புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி

துணிவெளுக்க மண்ணுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி
தோல்வெளுக்கச் சாம்பருண்டு - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி
மனம் வெளுக்க வழியில்லை - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாதுமாகி நின்றாய்

யாதுமாகி நின்றாய் - காளி
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் - நின்றன்
செயல்களன்றியில்லை
போதும் இங்கு மாந்தர் - வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதிசக்தி தாயே - என்மீ
தருள் புரிந்து காப்பாய்

எந்த நாளும் நின்மேல் - தாயே
இசைகள் பாடி வாழ்வேன்
கந்தனைப் பயந்தாய் - தாயே
கருணை வெள்ளமானாய்
மந்த மாருதத்தில் - வானில்
மலையினுச்சி மீதில்
சிந்தை யெங்கு செல்லும் - அங்குன்
செம்மை தோன்று மன்றே

## வேல் வேல் முருகா

வேல் வேல் முருகா வெற்றி வேல் முருகா
வெற்றி வேல் முருகா வீர வேல் முருகா
வீர வேல் முருகா ஞான வேல் முருகா
ஞான வேல் முருகா சக்தி வேல் முருகா
ஹர ஹர முருகா சிவ சிவ முருகா
சிவ சிவ முருகா ஓம்பால் முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றுப் பதிகம்

*திருச்சிற்றம்பலம்*

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்தால வாயான் திருநீறே.

இராவணன் மேலது நீறு வெண்ணத்தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் றிருநீறே.

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் றிருநீறே.

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் றிருநீறே.

ஆற்ற லடல்விடை யேறு மால வாயான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறுநல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கண் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதன் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடு உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரிய தளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடு உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிள முலைநன்மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல்நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரோ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில் கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள்

ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

•

உற்றவர்க்குதவும் பெரு மானை
ஊர்வதொன்றுடை யான் உம்பர் கோயைப்
பற்றினார்க் கென்றும் பற்றவன் தன்னைப்
பாவிப்பார் மனம் பாவிக் கொண்டானை
அற்றமில் புகழாள் உமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கற்றைவார் சடைக் கம்பன் எம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே

திரியும் முப்புரந் தீர்ப்பிழம்பாகச்
செங்கண் மால்விடை மேல் திகழ்வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந்தானைக்
காமனைக் கனலா விழித்தானை
வரிகொள் வெள்வளையாள் உமை நங்கை
மருவி ஏத்தி வழி படப்பெற்ற
பெரிய கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்ட லம்திகழ் காதுடை யானைக்
கூற்று தைத்த கொடுந்தொழிலானை
வண்டலம்பு மலர்க் கொன்றையினானை
வாளராமதி சேர் சடையானைக்
கொண்டையந்தடங் கண் உமை நங்கை
கெழுமி யேத்தி வழி படப் பெற்ற
கண்டம் நஞ்சுடைக் கம்பனெம்மானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

வெல்லும் வெண்மழு ஒன்றுடையானை
வேலை நஞ்சுண்ட வித்தகன் தன்னை
அல்லல் தீர்த்தருள் செய்ய வல்லானை
அருமறையவை அங்கம் வல்லானை
எல்லையில் புகழாளுமை நங்கை
யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

திங்கள் தங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங் கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடையானைச்
சாம வேதம் பெரிதுகப்பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி யேத்தி வழி படப் பெற்ற
கங்கையாளனைக் கம்பனெம் பானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

விண்ண வர்தொழு தேத்தநின் றானை
வேதந் தான்விரித் தோதவல் லானை
நண்ணி னார்க்கென்றும் நல்லவன் றன்னை
நாளும் நாமுகக் கின்றபி ரானை
எண்ணில் தொல்புக ழாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணு மூன்றுடைக் கம்பன்எம் மானைக்
காணக கண் அடி யேன்பெற்ற வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித் தென்றும் நினைந்தெழுவார்கள்
சிந்தையில் திகழும் சிவன் தன்னை
பந்தித்தவினைப் பற்றறுப் பானைப்
பாலொடானஞ்சும் ஆட்டுகத் தானை
அந்தமில் புகழாள் உமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கந்தவார் சடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

வரங்கள் பெற்றுழல் வாள ரக்கர் தம்
வாலிய புரம் மூன்றெரித் தானை
நிரம்பிய தக்கன் தன்பெரு வேள்வி
நிரந்தரஞ் செய்த நிர்கண்டகனைப்
பரந்த தொல்புகழாள் உமைநங்கை
பரவி ஏத்தி வழி படப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

எள்கல் இன்றி இமையவர் கோனை
ஈசனை வழிபாடு செய்வாள் போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

பெற்றம் ஏறுகந் தேறவல் லானைப்
பெரிய எம்பெருமான் என்றெப்போதும்
கற்றவர் பரவப்படு வானைக்
காணக் கண் அடியேன் பெற்றதென்று
கொற்றவன் கம்பன் கூத்தன் எம்மானைக்
குளிர்பொழில் திருநாவல் ஆரூரன்
நற்றமிழ் இவை ஈரைந்தும் வல்லர்
நன்னெறி உலகெய்துவர் தாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தாபிறை சூடிபெரு
மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய் இனி
அல்லேனென லாமே.

பொன்னார் மேனியனே புலித்
தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்
கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழ
பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லாமல் இனி
யாரை நினைக்கேனே.

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே.

முத்தாமுத்திதரவல்லமகிழ்மென் முலையாளுமைபறங்கா
சித்தாசித்தித்திறங்காட்டுஞ்சிவனே தேவர்சிங்கமே
பத்தாபத்தர்பலர் போற்றும்பரமா பழையனூர்மேய
அத்தாவலங்காடா வுன்னடியார்க்கடியேனாவேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவார் கொன்றை மதிசூடி
மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
மகிழ்ந்து பூதப்படை சூழத்
திருமால் பிரமன் இந்திரற்குந்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே.

வாழ்வாவது மாயம்மி துமண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்
தாழாதறஞ் செய்மின்றடங் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுறநின்றான் திருக்கேதாரமேனீரெ

நத்தார்படை ஞானன் பசுவேறிநனை கவிழ்வாய்
மத்தமத யானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேற்
செத்தாரெலும் பணிவான் றிருக்கேதீச்சரத்தானே

எங்கேனும்மிருந் துன்னடியேனுனை நினைந்தால்
அங்கேவந்தென்னொடு முடனாகி நின்றருளி
இங்கேயென் வினையையறுத்திட்டெனையாளுங்
கங்காநாயகனே  கழிப்பாலைமேயானே

பண்ணிடைத் தமிழொப்பாய்பழத் தினிற்சுவையொப்பாய்
கண்ணிடைமணியொப்பாய் கடுவிருட்சுடரோப்பாய்
மண்ணிடையடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆருரில் அம்மானுக் காளே.

குறைவிலா நிறைவே குணக்குன்றே
கூத்தனே குழைக்காதுடையானே
உறவிலேனுனையன்றி மற்றடியேன்
ஒருபிழைபொறுத்தா லிழிவுண்டோ
சிறைவண்டார்பொழில் சூழ்திருவாரூர்ச்
செம்பொனே திருவாவடுதுறையுள்
அறவனேயெனையஞ்ச லென்றருளாய்
ஆரெனக்குற வமரர்களேறே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசகர் திருவாசகம்

## சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும் பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவில்லாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார்
(தங்கருத்தின்
நோக்கு அரிய நோக்கே நுணுக்குஅரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும்இல்லாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாய்
தேற்றனே தேற்றத் தெளிவே என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானே சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதா ரமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எம்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்த தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைத்தீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலுறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம்இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையும் சிலவோ பலவமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோரெம் பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிது பாதமலர்
போதார் புனைமுடிம் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன் பேர் ஆருற்ற ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

மொய்யார் தடம்பொய்கை புக்குமுகே ரென்னக்
கையார் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயாவழி யடியோம் வாழந் தோங்காண் ஆரழல் போற்
செய்யா வெண்ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கன் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தெழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைச் சிற்றம்பலத்தேத் தியாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏந்திஇருஞ்சுனை நீராடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப் பக்
கொங்கைகள் பொங்கக் குடைந்து புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

காதார் குழையாட பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள் பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச்சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத்திறம் பாடி ஆடேலோ ரெம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவாநெடுந்தரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிக் கடலைசுருக்கி யெழுந்துடையாள்
என்னைத் திகழ்ந் தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தொம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னைச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிப் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய்மழையேலோ ரெம்பாவாய்.

செங்கணவன் பால்திசைமுகன் பால்தேவர்கள் பால்
எங்கும் இலாதோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலின் நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தாந்தருளுஞ் சேவகனை
அங்கன் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கன் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கையப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாகி அலியாயப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணாரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப்பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல்லா வுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல்லா வுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லா வுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட்கொண்டருளும் பொன் மலர்கள்
போற்றியாம் மார்கழிநீரா டேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

*திருச்சிற்றம்பலம்*

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமி யும்பார் மகளும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரி யும்பார்ப் பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாறனம் மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நி லாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொற்செய் சுண்ணம் இடித்தும் நாமே.

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கோய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலகை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திரு வேகம் பன்செம்பொற்கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
காட்டப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதா தென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

வையகம் எல்லாம் உரல தாக
மாமெரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யென்னும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலகை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

முத்தணி கொங்கை ஆட ஆட
மொய் குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனெடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தெம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

மின்னிடைச் செந்துவார் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே.

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்புச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப வரோஇ ரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பெங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே.

ஞானக்கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப்பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப்பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர் தாம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர்கனவிலும் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுங் செல்வச்
சேவகம் ஏந்தியவெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும் நாமே.

தேனாக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம்பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப்பிள்ளை பாடி
மால்விடைபாடி வலக்கை யேந்தும்
ஊனாக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே.

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறிதத்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே.

வட்டமலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாயிருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாக்குக்
காதியும் அந்தமும் ஆயி னாக்குக்
காடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

திருச்சிற்றம்பலம்

## அபிராமி துதி

திருச்சிற்றம்பலம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள்வா ராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்:
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி அபிராமி யே!

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன்துணை

# கந்த சஷ்டி கவசம்



காப்பு

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மைய னடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காகக்
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருடன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்க தாக்க தடையறத்தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக்கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனை வரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொங்கு
குத்து குத்து கூர்வடி வேலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டதுவோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைக்ஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமார
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமசா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப்பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக ணீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவனீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திடவருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகத்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்த வணங்குவார்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறித்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரஹகண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

*முற்றிற்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கந்தகுரு கவசம்

கலியுகத் தெய்வமே கந்தனுக்கே மூத்தோனே
மூஷிக வாகனனே மூலப்பொருளோனே
ஸ்கந்தகுரு கவசத்தை கலிதோஷம் நீங்கிடவே
திருவடியின் திருவருளால் செப்புகிறேன் காத்தருள்வாய்
சித்தி விநாயக ஜயமருள் போற்றுகிறேன்
சிற்பர கணபதே நற்கதியும் தந்தருள்வாய்
கணபதி தாளிணையைக் கருத்தினில் வைத்திட்டேன்
அச்சம் தீர்த்தென்னை ரக்ஷித்திடுவீரே.

ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்
சரவணபவ குஹா சரணம் சரணம்
குருகுஹா சரணம் குருபரா சரணம்
சரணமடைந்திட்டேன் கந்தா சரணம்
தனைத்தா னறிந்து நான் தன்மயமாகிடவே
ஸ்கந்தகிரி குருநாதா தந்திடுவீர் ஞானமுமே
தத்தகிரி குருநாதா வந்திடுவீர் வந்திடுவீர்
அவதூத ஸத்குருவாய் ஆண்டவனே வந்திடுவீர்
அன்புருவாய் வந்தென்னை ஆட்கொண்ட குருபரனே
அறம் பொருளின்பம் வீடுமே தந்தருள்வாய்
தந்திடுவாய் வரமதனை ஸ்கந்தகுருநாதா
சண்முகா சரணம் சரணம் ஸ்கந்தகுரோ

காத்திடுவாய் காத்திடுவாய் ஸ்கந்தகுரு நாதா
போற்றிடுவேன் போற்றிடுவேன் புவனகுரு நாதா
போற்றி போற்றி ஸ்கந்தா போற்றி
போற்றி போற்றி முருகா போற்றி
அறுமுகா போற்றி அருட்பதம் அருள்வாய்
தகப்பன் சாமியே என் இதயத்துள் தங்கிடுவாய்
ஸ்வாமி மலைதனில் சொன்னதைனைச் சொல்லிடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுரு நாதா செப்பிடுவாய் ப்ரணவமதை
அகக்கண் திறக்க அருள்வாய் உபதேசம்
திக்கெலாம் வென்று திருச்செந்தில் அமர்ந்தோனே
ஆறுமுக ஸ்வாமி யுன்னை அருட்சோதியாய்க் காண
அகத்துள்ளே குமரா நீ அன்புமயமாய் வருவாய்
அமரத் தன்மையினை அனுக்ரஹித் திடுவாயே
வேலுடைக் குமரா நீ வித்தையும் தந்தருள்வாய்
வேல்கொண்டு வந்திடுவாய் காலனை விரட்டிடவே
தேவரைக் காத்த திருச்செந்தி லாண்டவனே
திருமுருகன் பூண்டியிலே திவ்யஜோதி யானகந்தா
பரஞ்சோதி யுங்காட்டி பரிபூர்ண மாக்கிடுவாய்
திருமலை முருகாநீ திடஞான மருள்புரிவாய்
செல்வமுத்துக் குமரா மும்மல மகற்றிடுவாய்
அடிமுடி யறியவொணா அண்ணா மலையோனே
அருணாசலக் குமரா அருணகிரிக் கருளியவா
திருப்பரங் கிரிகுஹனே தீர்த்திடுவாய் வினைமுழுதும்
திருத்தணி வேல்முருகா தீரனாய் ஆக்கிடுவாய்

எட்டுக்குடி குமரா ஏவல்பில்லி சூனியத்தை
பகைவர் சூதுவாதுகளை வேல்கொண்டு விரட்டிடுவாய்
எல்லாப் பயன்களும் எனக்குக் கிடைத்திடவே
எங்கும் நிறைந்த கந்தா எண்கண் முருகா நீ
என்னுள் ளறிவாய் நீ உள்ளொளியாய் வந்தருள்வாய்
திருப்போரூர் மாமுருகா திருவடியே சரணமய்யா
அறிவொளியாய் வந்த நீ அகக்கண்ணைத் திறந்திடுவாய்.

திருச்செந்தூர் ஷண்முகனே ஜகத்குருவிற் கருளியவா
ஜகத்குரோ சிவகுமரா சித்தமல மகற்றிடுவாய்
செங்கோட்டு வேலவனே சிவானு பூதிதாரும்
சிக்கல் சிங்காரா ஜீவனைச்சிவ னாக்கிடுவாய்
குன்றக் குடிகுமரா குருகுகனாய் வந்திடப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரகிரிப் பெருமானே மனத்தையும் மாய்த்திடுவீர்
பச்சைமலை முருகா இச்சையைக் களைந்திடப்பா
பவழமலை ஆண்டவனே பாவங்களைப் போக்கிடப்பா
விராலிமலை ஷண்முகனே விரைவில் நீ வந்திடப்பா
வயலூர் குமரகுரோ ஞானவரமெனக் கருள்வீரே
வெண்ணெய் மலைமுருகா மெய்வீட்டைத் தந்திடுவீர்
கதிர்காம வேலவனே மனமாயை அகற்றிடுவீர்
காந்த மலைக்குமரா கருத்துள் வந்திடுவீர்
மயிலத்து முருகாநீ மனத்தகத்துள் வந்திடுவீர்
கஞ்சமலை சித்தகுரோ கண்ணொளியாய் வந்திடுவீர்
குமரமலை குருநாதா கவலையெல்லாம் போக்கிடுவீர்
வள்ளிமலை வேல்முருகா வேல்கொண்டு வந்திடுவீர்
வடபழனி யாண்டவனே வல்வினைகள் போக்கிடுவீர்
ஏழுமலை யாண்டவனே எத்திக்கும் காத்திடுவீர்
ஏழ்மை யகற்றிகந்தா எமபயம் போக்கிடுவீர்
அசையாத நெஞ்சத்தில் அறிவாக நீ அருள்வாய்
ஆறுபடைக் குமரா மயிலேறி வந்திடுவாய்
பணிவதே பணியென்று பணித்தனை நீ எனக்கு
பணிந்தேன் கந்தா உன்பாதம் பணிந்துவப்பேன்
அருட்பெருஞ்ஜோதியே அன்பெனக் கருள்வாயே.

படர்ந்த அன்பினை நீ பரம்பிரம்மம் என்றனையே
உலகெங்கு முள்ளது ஒருபொருள் அன்பேதான்
உள்ளுயிராகி இருப்பதும் அன்பென்றாய்
அன்பே குமரன் அன்பே ஸ்கந்தன்
அன்பே ஒமெனும் அருள்மந்திரம் என்றாய்
அன்பை உளத்திலே அசையாது அமர்த்திடுமோர்
சக்தியைத் தந்து தடுத்தாட் கொண்டிடவும்
வருவாய் அன்பனாய் வந்தருள் ஸ்கந்தகுரோ
யாவர்க்கும் இனியன் நீ யாவர்க்கும் எளியன் நீ
யாவர்க்கும் வலியன் நீ யாவர்க்கும் மானோய் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கொரு கோயிலை என் அகத்துள்ளே புனைவேனே
சிவசக்திக் குமரா சரணம் சரணமையா
அபாயம் தவிர்த்து தடுத்தாட் கொண்டருள்வாய்
நிழல்வெயில் நீர்வெருப்பு மண்காற்று வானதிலும்
பகைமையை அகற்றி அபயமளித் திடுவீர்
உணர்விலே ஒன்றி என்னை நிர்மல மாக்கிடுவாய்
யானென தற்றமெய்ஞ் ஞானம் தருள்வாய் நீ
முக்திக்கு வித்தான முருகா கந்தா.

சதுர்மறை போற்றும் ஷண்முக நாதா
ஆகமம் ஏத்தும் அம்பிகை புதல்வா
ஏழையைக் காக்க நீ வேலேந்தி வந்திடுவாய்
தாயாய்த் தந்தையாய் முருகா தக்கணம் நீ வருவாய்
சக்தியும் சிவனுமாய்ச் சடுதியில் நீ வருவாய்
பரம்பொருளான பாலனே ஸ்கந்தகுரோ
ஆதிமூலமே அருவாய் உருவாய் நீ
அடியனைக் காத்திட அறிவாய் வந்தருள்வாய்
உள்ளொளியாய் முருகா உடனே நீ வா வா வா
தேவாதி தேவா சிவகுரோ வா வா வா
வேலாயுதத்துடன் குமரா விரைவில் நீ வந்திடப்பா
காண்பன யாவுமாய்க் கண்கண்ட தெய்வமாய்
வேதச் சுடரோய் மெய்கண்ட தெய்வமே
மித்தையாம் இவ்வுலகை மித்தையென் றறிந்திடச் செய்
அபயம் அபயம்கந்தா அபயமென் றலறுகிறேன்
அமைதியை வேண்டி அருமுகவா வாவென்றேன்
உன்துணை வேண்டினேன் உமையவள் குமராகேள்
அச்சம் அகற்றிடுவாய் அமைதியைத் தந்திடுவாய்
வேண்டிய துன்னருளே அருள்வதுன் கடனேயாம்
உன் அருளாலே உன்தாள் வணங்கிட்டேன்
அட்டமா சித்திகளை அடியனுக் கருளிடப்பா
அஜபை வழியிலே அசையாம லிருத்திவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர்கள் போற்றிடும் ஞானசித்தியும் தந்துவிடு
சிவானந்தத் தேனில் திளைத்திடவே செய்துவிடு
அருள்ஒளிக் காட்சியை அகத்துளே காட்டிவிடு
அறிவை அறிந்துவிடும் அவ்வருளையும் நீ தந்துவிடு
அனுக்ரஹித் திடுவாய் ஆதிகுரு நாதாகேள்
ஸ்கந்த குருநாதா ஸ்கந்த குருநாதா
தத்துவம் மறந்து தன்னையும் நான்மறந்து
நல்லது கெட்டதும் நானென்பதும் மறந்து
பாவ புண்ணியத்தோடு பரலோகம் மறந்திடச்செய்
அருள்வெளி விட்டிவனை அகலா திருத்திடுவாய்
அடிமையைக் காத்திடுவாய் ஆறுமுகக் கந்தகுரோ
சித்தியிலே பெரிய ஞானசித்தி நீ அருள
சீக்கிரமே வருவாய் சிவானந்தம் தருவாய்
சிவானந்தம் தந்தருளி சிவசித்தி ராக்கிடுவாய்
சிவனைப் போலென்னை செய்திடுவ துன்கடனே
சிவசத் குருநாதா சிவசத் குருநாதா.

ஸ்கந்த குருநாதா கதறுகிறேன் கேட்டிடுவாய்
தாளினைப் பிடித்தேன் தந்திடு வரமெனக்கு
திருவருட் சக்தியைத் தந்தாட் கொண்டிடுவாய்
சத்ரு பகைவர்களை ஷண்முகா ஒழித்திட்டு
கிழக்குத் திசையிலிருந்து க்ருபாகரா காப்பாற்றும்
தென்கிழக்குத் திசையிலிருந்து தீனபந்தோ காப்பாற்றும்
தென்திசை யிலுமென்னைத் திருவருளால் காப்பாற்றும்
தென்மேற் கிலுமென்னைத் திறல்வேலால் காப்பாற்றும்
மேற்குத் திக்கிலென்னை மால்மருகா ரக்ஷிப்பாய்
வடமேற் கிலுமென்னை மயிலோனே ரக்ஷிப்பாய்
வடக்கிலென்னைக் காப்பாற்ற வந்திடுவீர் சத்குருவாய்
வடகிழக்கில் எனக்காக மயில்மீது வருவீரே.
பத்துதிக்குத் தோறுமெனை பறந்துவந்து ரக்ஷிப்பாய்
என்சிகையையும் சிரசினையும் சிவகுரோ ரக்ஷிப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியும் புருவமும் நினதருள் காக்கட்டும்
புருவங்களுக் கிடையே புருஷோத்தமன் காக்கட்டும்
கண்க ளிரண்டையும் கந்தவேல் காக்கட்டும்
நாசிக ளிரண்டையும் நல்லவேல் காக்கட்டும்
செவிக ளிரண்டையும் சேவற்கொடி காக்கட்டும்
கன்னங்க ளிரண்டையும் காங்கேயன் காக்கட்டும்
உதட்டி னையும்தான் உமாசுதன் காக்கட்டும்
நாக்கை நம்முருகன் காக்கட்டும்
பற்களைக் கந்தன் பலம் கொண்டு காக்கட்டும்
கழுத்தை ஸ்கந்தன் கைகளால் காக்கட்டும்
தோள் களிரண்டையும் தூயவேல் காக்கட்டும்
கைகள் விரல்களைக் கார்த்திகேயன் காக்கட்டும்
மார்பையும் வயிற்றையும் வள்ளிமணாளன் காக்கட்டும்
மனத்தை முருகன்கை மாத்தடிதான் காக்கட்டும்
ஹ்ருதயத்தில் ஸ்கந்தன் இனிதுநிலைத் திருக்கட்டும்
உதரத்தை யெல்லாம் உமைமைந்தன் காக்கட்டும்
நாபிகுஹ்யம் லிங்கம் நவையுடைக் குதத்தோடு
இடுப்பை முழங்காலை இணையான கால்களையும்
புறங்கால் விரல்களையும் பொருந்து முகர் அனைத்தையுமே
உரோம த்வாரமெல்லாம் உமைபாலா ரக்ஷிப்பாய்
தோல்ரத்தம் மஜ்ஜையையும் மாம்ஸமென்பு மேதஸையும்.

அறுமுகவா காத்திடுவீர் அமரர்தலைவா காத்திடுவீர்
என் அஹங்காரமுமகற்றி அறிவொளியா யிருந்தும்
முருகா வெனைக்காக்க வேல்கொண்டு வந்திடுவீர்
பாபத்தைப் பொசுக்கி பாரெல்லாம் சிறப்புறவே
ஓம் ஸௌம் சரவணபவ ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் என்றும்
க்லௌம் ஸௌம் நம:வென்று சேர்த்திடடா நாள்தோறும்
ஓமிருந்து நம:வரை ஒன்றாகச் சேர்த்திடடா
ஒன்றாகக் கூட்டியுமே உள்ளத்திலே இருத்தி
ஒருமனத்தோடு நீ உருவையும் ஏத்திடடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனின் மூலமிது முழுமனத்தோ டேத்திட்டால்
மும்மல மகன்றுவிடும் முக்தியுந்தன் கையிலுண்டாம்
முக்தியை வேண்டியுமே எத்திக்கும் செல்லவேண்டாம்
முருகன் இருப்பிடமே முக்தித்தல மாகுமப்பா
ஹ்ருதயத்தில் முருகனை இருத்திவிடு இக்கணமே
இக்கணமே மூலமந்த்ரம் ஏத்திவிடு ஏத்திவிடு
மூலமதை ஏத்துவோர்க்குக் காலபய மில்லையடா
காலனை நீ ஜயிக்க கந்தனைப் பற்றிடடா
சொன்னபடிச் செய்தால் சுப்ரமண்ய குருநாதன்
தன்னொளிப் பெருஞ்சுடராய் உன்னுள்ளே தானிருப்பான்
ஜகமாயை ஜயித்திடவே செப்பினேன் மூலமுமே
மூலத்தை நீஜபித்தே முத்தனு மாகிடடா
அக்ஷர லக்ஷமிதை அன்புடன் ஜபித்துவிடில்

எண்ணிய தெலாம்கிட்டும் எமபய மகன்றோடும்
மூவுலகும் பூஜிக்கும் முருகனருள் முன்னிற்கும்
பூவுலகில் இணையற்ற பூஜ்யனு மாவாய்நீ
கோடித்தரம் ஜபித்துக் கோடிகாண வேண்டுமப்பா
கோடிகாணச் சொன்னதை நீ நாடிடுவாய் மனமே
ஜன்மம் கடைத்தேற ஜபித்திடுவாய் மனமே
வேதாந்த ரகசியமும் வெளியாகு முன்னுள்ளே
வேத சூக்ஷ்மத்தை விரைவாகப் பற்றிடலாம்
சுப்ரஹ் மண்யகுரு ஜோதியாயுள் தோன்றிடுவான்
அருட்பெருஞ் ஜோதியான ஆறுமுக ஸ்வாமியுமே
அந்தர் முகமிருந்து ஆட்கொள்வான் சத்தியமாய்
சித்தியையும் முக்தியையும் ஸ்கந்தகுரு தந்திடுவான்.

நின்னையே நான் வேண்டி நித்தமும் ஏத்துகிறேன்
மெய்யறிவாகக் கந்தா வந்திடுவாய் இவனுளே நீ
வந்திடுவாய் மருவிடுவாய் பகுத்தறி வாகவே நீ
பகுத்தறி வோடிவனைப் பார்த்திடச் செய்திடப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுத்தறிவான கந்தன் பரங்குன்றில் இருக்கின்றான்
பழனியில் நீயும் பழம்ஜோதி யானாய் நீ
பிரமனுக் கருளியவா பிரணவப் பொருளோனே
பிறவா வரமருளி பிரம்மமய மாக்கிடுவாய்
திருச்செந்தூரில் நீ சக்திவேல் தாங்கிவிட்டாய்
பழமுதிர்ச் சோலையில் பரஞ்சோதி மயமானாய்
சுவாமி மலையிலே சிவசுவாமிக் கருளிய நீ
குன்றுகள் தோறும் குருவாய் அமர்ந்திட்டோய்
ஸ்கந்தகிரியை நீ சொந்தமாக்கிக் கொண்டனையே
ஸ்கந்த குருநாதா ஸ்கந்தாஸ்ரம ஜோதியே
பிறப்பையும் இறப்பையும் பெயர்த்துக் கார்த்திடுவாய்
பிறவாமை என்கின்ற பெருவரம் நீ தந்திடுவாய்
தத்துவக் குப்பையை மறந்திடச் செய்திடுவாய்
எந்த நினைப்பையும் எரித்து நீ காத்திடுவாய்
ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்
சரண மடைந்திட்டேன் சடுதியில் வாருமே
சரவண பவனே சரவண பவனே
உன்னரு ளாலேநான் உயிரோ டிருக்கின்றேன்.
உயிருக்குயிரானகந்தா உன்னிலென்னைக் கரைத்திடப்பா

என்னி லுன்னைக்காண எனக்கு வரமருள்வாய்
சீக்கிரம் வந்து சிவசித்தியும் தந்தருள்வாய்
இடகலை பிங்கலை ஏதும் அறிந்திலேன்நான்
இந்திரிய மடக்கி இருந்து மறிகிலேன்நான்
மனதை அடக்க வழிஒன்றும் அறிந்திலேன் நான்
ஸ்கந்தாஉன் திருவடியைப் பற்றினேன் சிக்கெனவே
சிக்கெனப் பற்றினேன் செப்பிடுவீர் உபதேசம்
காமக் கசடுகள் யாவையும் களைந்திடுவாய்
சித்த சுத்தியும் ஜபமும் தந்திடுவாய்
நினைப்பெலாம் நின்னையே நினைந்திடச் செய்திடுவாய்
திருமுருகா வுன்னைத் திடமுற நினைத்திடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருள் தந்திடுவாய் திருவருள்தான் பொங்கிடவே
திருவருள் ஒன்றிலே நிலைபெறச் செய்திடுவாய்
நிலைபெறச் செய்திடுவாய் நித்யா னந்தமதில்
நித்யா னந்தமே நின்னுரு வாகையினால்
அத்வை தானந்தத்தில் இமைப்பொழுது ஆழ்த்திடுவாய்
ஞான பண்டிதா நான்மறை வித்தகாகேள்
ஸ்கந்த குருநாதா ஸ்கந்தகுரு நாதாகேள்
மெய்ப்பொருள் காட்டி மேன்மை அடைந்திடச் செய்
வினைகள் யாவையுமே வேல்கொண்டு விரட்டிடுவாய்
தாரித் திரியங்களையுன் தடிகொண்டு விரட்டிடுவாய்
துக்கங்க ளனைத்தையும் தொலைதூரம் போக்கிடுவாய்
பாப உடலைப் பரிசுத்த மாக்கிடுவாய்
இன்ப துன்பத்தை இருவிழியால் விரட்டிடுவாய்
ஆசைப் பேய்களை அறவே நசுக்கிடுவாய்
அகந்தைப் பிசாசை அழித்து ஒழித்திடடா
மெய்யருளாம் உன்னருகில் முருகா இருத்திடுவாய்.

கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே
ஆறுமுக மானகுரோ அறிந்திட்டே னுன்மகிமை
இக்கணமே வருவாய் என்ஸ்கந்த குருவேநீ
என்னைக் காத்திடவே எனக்குநீ அருளிடவே
அரைக் கணத்தில் நீயும் ஆடிவரு வாயப்பா
வந்தென்னைத் தடுத்து வலிய ஆட்கொள் வரதகுரோ
அன்புத் தெய்வமே ஆறுமுக மானவனே.
சுப்ரஹ் மண்யனே சோகம் அகற்றிடுவாய்
ஞான ஸ்கந்தரே ஞானம் அருள்வாய் நீ
ஞான தண்டபாணியே என்னை ஞானபண்டிதனாக்கிடுவாய்
அகந்தையெலா மழித்து அன்பினை ஊட்டிடுவாய்
அன்பு மயமாக்கி ஆட்கொள்ளு வையப்பா
அன்பைஎன் உள்ளத்தில் அசைவின்றி நிறுத்திவிடு
அன்பையே கண்ணாக ஆக்கிக் காத்திடுவாய்
உள்ளும் புறமும் உன்னருளாம் அன்பையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியாக நானும் பற்றிட உவந்திடுவாய்
எல்லையில்லாத அன்பே இறைவெளி என்றாய்நீ
அங்கிங் கெனாதபடி எங்கும் அன்பென்றாய்
அன்பே சிவமும் அன்பே சக்தியும்
அன்பே ஹரியும் அன்பே பிரம்மனும்
அன்பே தேவரும் அன்பே மனிதரும்
அன்பே நீயும் அன்பே நானும்
அன்பே சத்தியம் அன்பே நித்தியம்
அன்பே சாந்தம் அன்பே ஆனந்தம்
அன்பே மௌனம் அன்பே மோக்ஷம்
அன்பே பிரம்மமும் அன்பே அனைத்துமென்றாய்
அன்பிலாத இடம் அங்குமிங்கு மில்லையென்றாய்
எங்கும் நிறைந்த அன்பே என் குருநாதனப்பா
அன்பில் உறையும் அருட்குரு நாதரே தான்
ஸ்கந்தாஸ் ரமத்தில் ஸ்கந்தகுரு வானான்காண்
மூவரும் தேவரும் முனிவரும் போற்றிடவே
ஸ்கந்தாஸ் ரமந்தனில் ஸ்கந்த ஜோதியுமாய்
ஆத்ம ஜோதியுமாய் அமர்ந்திட ஸ்கந்தகுரு
இருளை அகற்றவே எழுந்திட்ட எங்கள் குரு
எல்லை யில்லாதஉன் இறைவெளியைக் காட்டிடுவாய்
முக்தியைத் தந்திடுவாய் மூவரும் போற்றிடவே
நம்பினேன் உன்னையே நம்பினேன் ஸ்கந்தகுரோ
உனையன்றி இவ்வுலகில் ஒன்றுமில்லை என்றுணர்ந்தேன்

நன்கறிந்து கொண்டேன் நானும் உனதருளால்
விட்டிட மாட்டேன் கந்தா வீட தருள்வீரே
நடுநெற்றித் தானத்து நானுனைத் தியானிப்பேன்
பிரம மந்திரத்தைப் போதித்து வந்திடுவாய்
சுழுமுனை மார்க்கமாய் ஜோதியைக் காட்டிடுவாய்
சிவயோகி யாகயெனைச் செய்திடும் குருநாதா
ஆசை அறுத்து அரனடியைக் காட்டிவிடும்
மெய்யடிய ராக்கி மெய்வீட்டில் இருத்திவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்கு நாட்டிலே கோயில் கொண்ட ஸ்கந்தகுரோ
கொல்லிமலை மேலே குமரகுரு வானவனே
கஞ்சமலை சித்தர்போற்றும் ஸ்கந்தகிரி குருநாதா
கருவூரார் போற்றும் காங்கேயா ஸ்கந்தகுரோ
மருதமலைச் சித்தன் மகிழ்ந்துபணி பரமகுரோ
சென்னி மலைக்குமரா சித்தர்க் கருள்வோனே
சிவவாக்கிய சித்தருனைச் சிவன்மலையில் போற்றுவரே
பழனியில் போகருமே பாரோர்வாழப் பிரதிஷ்டித்தான்
புலிப்பாணி சித்தர்களால் புடைசூழ்ந்த குமரகுரோ
கொங்கில் மலிந்திட்ட ஸ்கந்த குருநாதா
கள்ளம் கபடமற்ற வெள்ளையுள்ளம் அருள்வீரே
கற்றவர்க ளோடென்னைக் களிப்புறச் செய்திடுமே
உலகெங்கும் நிறைந்திருந்தும் கந்தகுரு உள்ள இடம்
ஸ்கந்தகிரி என்பதைநான் கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்.

நால்வர் அருணகிரி நவமிரண்டு சித்தர்களும்
பக்தர்களும் போற்றும் பழனிமலை முருகாகேள்
கொங்கு தேசத்திலே குன்றுதோறும் குடிகொண்டோய்
சீலம் நிறைந்த சேலம் மாநகரத்தில்
கன்னிமார் ஓடையின் மேல் ஸ்கந்தகிரி அதனில்
ஸ்கந்தாஸ் ரமத்தினிலே ஞானஸ்கந்த சத்குருவாய்
அமர்ந்திருக்கும் ஜோதியே ஆதிமூல மானகுரோ
அயர்ச்சியை நீக்கிடுவாய் என் தளர்ச்சியை அகற்றிடுவாய்
சுகவனேசன் மகனே சுப்ரமண்ய ஜோதியே
பேரின்ப மகிழ்ச்சியையும் பெருகிடச் செய்திடப்பா
பரமா னந்தமதில் எனை மறக்கப் பாலிப்பாய்
மால் முருகா வள்ளி மணவாளா ஸ்கந்தகுரோ
சிவகுமரா உன்கோயில் ஸ்கந்தகிரி என்றுணர்ந்தேன்.
ஜோதிப் பிழம்பான சுந்தரனே பழனியப்பா
சிவஞானப் பழமான ஸ்கந்தகுரு நாதா
பழம் நீ என்றதினால் பழனிமலை யிருந்தாயோ
திருவா வினன்குடியில் திருமுருக னானாயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரா முருகா குருகுகா வேலவனே
அகத்தியர்க் குத்தந்து ஆட்கொண்டாய் தமிழகத்தை
கலியுக வரதனென்று கலசமுனி உனைப்புகழ்ந்தான்
ஔவைக்கு அருள்செய்த அருமுகவா ஸ்கந்தகுரோ
ஒழுக்கமொடு கருணையையும் தவத்தையும் தந்தருள்வாய்
போகருக் கருள் செய்த புவன சுந்தரனே
தண்டபாணித் தெய்வமே தடுத்தாட் கொண்டிடப்பா
ஆண்டிக் கோலத்தில் அணைத்திடுவாய் தண்டுடனே
தெய்வங்கள் போற்றிடும் தண்டாயுத ஜோதியே
ஸ்கந்தகிரி மேலே ஸ்கந்தகிரிஜோதி யானவனே
கடைக்கண்ணால் பார்த்திடப்பா கருணையுள்ள ஸ்கந்தகுரோ.

ஏழையைக் காத்திடப்பா ஏத்துகிறேன் உன்நாமம்
உன்னையன்றி வேறொன்னை ஒருபோதும் நம்புகிலேன்
கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே
கந்தனென்ற பேர்சொன்னால் கடிதாக நோய்தீரும்
புவனேஸ்வரி மைந்தா போற்றினேன் திருவடியை
திருவடியை நம்பினேன் திடிருவடி ஸாக்ஷியாக
புவனமாதா மைந்தனே புண்ணிய மூர்த்தியேகேள்
நின் நாமம் ஏத்துவதே நான் செய்யும் தவமாகும்
நாத்தழும் பேறவே ஏத்திடுவேன் நின் நாமம்
முருகா முருகாவென்றே மூச்செல்லாம் விட்டிடுவேன்
உள்ளும் புறமும் ஒருமுருகனையே காண்பேன்

அங்கிங் கெனாதபடி எங்குமே முருகனப்பா
முருகன் இல்லாவிட்டால் மூவுலக மேதப்பா
அப்பப்பா முருகனின் அருகே உலகமப்பா
அருளெலாம் முருகன் அன்பெலாம் முருகன்
ஸ்தாவர ஜங்கமமாய் ஸ்கந்தனாய் அருவுருவாய்
முருகனாய் முதல்வனாய் ஆனவன் ஸ்கந்தகுரு
ஸ்கந்தாஸ் ரமமிருக்கும் ஸ்கந்தகுரு அடிபற்றிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் அடைந்தவர்கள் ஸாயுஜ்யம் பெற்றிடுவர்
சத்தியம் சொல்கின்றேன் சந்தேகமில்லையப்பா
வேதங்கள் போற்றிடும் வடிவேலன் முருகனை நீ
சந்தேக மில்லாமல் சத்தியமாய் நம்பிடுவாய்
சத்திய மானதெய்வம் ஸ்கந்த குருநாதன்
சத்தியம் காணவே நீ சத்தியமாய் நம்பிடப்பா.

சத்தியம் வேறல்ல ஸ்கந்தகுரு வேறல்ல
ஸ்கந்தகுரு வேஸத்தியம் சத்தியமே ஸ்கந்தகுரு
சத்தியமாய்ச் சொன்னதை சத்தியமாய் நம்பியே நீ
சத்தியமாய் ஞானமாய் சதானந்த மாகிவிடு
அழிவற்ற ப்ரம்மமாய் ஆக்கிவிடுவான் முருகன்
திருமறைகள் திருமறைகள் செப்புவதும் இதுவே தான்
ஸ்கந்தகுரு கவசமதை சொந்தமாக்கிக் கொண்டு நீ
பொருளுணர்ந்து ஏத்திடப்பா பொல்லாப்பு வினையகலும்
பிறவிப் பிணியகலும் பிரம்மா னந்தமுண்டு
இம்மையிலும் மறுமையிலும் இமையோருன்னைப் போற்றிடுவர்
மூவருமே முன்னிற்பர் யாவருமே பூஜிப்பர்
அனுதினமும் கவசத்தை அன்புடன் ஏத்திடப்பா
சிரத்தா பக்தியுடன் சிந்தையொன்றிச் செப்பிடப்பா
கவலைய கன்றிடுமே கந்தனருள் பொங்கிடுமே
பிறப்பும் இறப்பும் பிணிகளும் தொலைந்திடுமே
கந்தன் கவசமே கவசமென்று உணர்ந்திடுவாய்
கவசம் ஏத்துவீரேல் கலியை ஜயித்திடலாம்
கலியென்ற அரக்கனைக் கவசம் விரட்டிடுமே
சொன்னபடிச் செய்து சுகமடைவாய் மனமே நீ
ஸ்கந்தகுரு கவசத்தைக் கருத்தொன்றி ஏத்துவோர்க்கு
அஷ்டைஸ் வர்யந்தரும் அந்தமில்லா இன்பந்தரும்
ஆல்போல் தழைத்திடுவன் அறுகுபோல் வேறோடிடுவன்
வாழையடி வாழையைப்போல் வம்சமதைப் பெற்றிடுவன்
பதினாறும் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்திடுவன்
சாந்தியும் சௌக்கியமும் ஸர்வமங்களமும் பெருகிடுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கந்தகுரு கவசமிதை கருத்திறுத்தி ஏற்றுவீரேல்
கர்வம் காமக்ரோதம் கலிதோஷ மகற்றுவிக்கும்
முன்செய்த வினையகன்று முருகனருள் கிட்டிவிடும்
அறம்பொருள் இன்பம் வீடு அதிசுலப மாய்க் கிட்டும்.

ஆசாரம் சீலமுடன் ஆதிநேம நிஷ்டையுடன்
கள்ளமிலா யுளத்தோடு கந்தகுரு கவசந்தன்னை
சிரத்தா பக்தியுடன் சிவகுமர னைநினைத்துப்
பாராயணம் செய்வீரேல் பார்க்கலாம் கந்தனையும்
கந்தகுரு கவசமிதை மண்டலம் நிஷ்டையுடன்
பகலிரவு பாராமல் ஒருமனதாய் பகருவீரேல்
திருமுருகன் வேல்கொண்டு திக்குகள் தோறும் நின்று
காத்திடுவான் கந்தகுரு கவலையில்லை நிச்சயமாய்
ஞான ஸ்கந்தனின் திருவடியை நம்பியே நீ
கந்தகுரு கவசந்தனை ஓதுவதே தவமெனவே
உணர்ந்துகொண்டு ஓதுவையேல் உனக்குப் பெரிதான
இகபர சுகமுண்டாம் என்னாளும் துன்பமில்லை.

துன்பம் அகன்றுவிடும் தொந்திரைகள் நீங்கிவிடும
இன்பம் பெருகிவிடும் இஷ்டசித்தி கூடிவிடும்
பிறவிப் பிணியகற்றி ப்ரம்மநிஷ்டை யும்தந்து
காத்து ரக்ஷிக்கும் கந்தகுரு கவசமுமே.
கவலையை விட்டு நீ கந்தகுரு கவசமிதை
இருந்த படியிருந்து ஏற்றிவிடு ஏற்றினால்
தெய்வங்கள் தேவர்கள் சித்தர்கள் பக்தர்கள்
போற்றிடுவர் ஏவலுமே புரிந்திடுவர் நிச்சயமாய்
ஸ்கந்தகுரு கவசம் சம்சயப் பேயோட்டும்
அக்ஞானமு மகற்றி அருள்ஒளியும் காட்டும்
ஞான ஸ்கந்தகுரு நானென்று முன்நிற்பன்
உள்ளொளி யாயிருந்து உன்னிலவ னாகிடுவன்.
தன்னில் உனைக்காட்டி உன்னில் தனைக்காட்டி
எங்கும் தனைக்காட்டி எங்குமுனைக் காட்டிடுவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கந்தஜோதி யானகந்தன் கந்தகிரி யிருந்து
தண்டாயுதம் தாங்கிக் தருகிறான் காட்சியுமே
கந்தன் புகழ்பாடக் கந்தகிரி வாருமினே
கந்தகிரி வந்துநிதம் கண்டுய்மின் ஜகத்தீரே
கலிதோஷ மகற்றுவிக்கும் கந்தகுரு கவசமிதை
பாராயணம் செய்து பாரில் புகழ்பெறுமின்.
ஸ்கந்தகுரு கவசபலன் பற்றறுத்துப் பரம்கொடுக்கும்
ஒருதரம் கவசமோதின் உள்ளழுக்குப் போகும்
இருதரம் ஏத்துவீரேல் எண்ணியதெல்லாம் கிட்டும்
மூன்றுதர மோதின் முன்னிற்பன் ஸ்கந்தகுரு
நான்முறை ஓதி தினம் நல்லவரம் பெறுவீர்
ஐந்துமுறை தினமோதி பஞ்சாக்ஷரம் பெற்று
ஆறு முறையோதி ஆறுதலைப் பெற்றிடுவீர்
ஏழுமுறை தினமேத்தின் எல்லாம் வசமாகும்
எட்டுமுறை ஏத்தில் அட்டமா ஸித்திகிட்டும்
ஒன்பது தரமோதின் மரண பயமொழியும்
பத்துத்தர மேத்திநித்தம் பற்றறுத்து வாழ்வீரே.

கன்னிமார் ஓடையிலே நீராடி நீறுபூசிக்
கந்தகுரு கவசமோதி கந்தகிரி ஏறிவிட்டால்
முந்தை வினையெல்லாம் கந்தன் அகற்றிடுவான்
நிந்தைகள் நீங்கிவிடும் நிஷ்டையுமே கைகூடும்.
கன்னிமார் ஓடைநீரை கைகளிலே நீஎடுத்துக்
கந்தனென்ற மந்திரத்தைக் கண்மூடி யுருவேற்றி
உச்சியிலும் தெளித்து உட்கொண்டு விட்டால் உன்
சித்தமலம் அகன்று சிவசுத்தியும் கொடுக்கும்.
கன்னிமார் தேவிகளைக் கன்னிமார் ஓடையிலே
கண்டு வழிபட்டு கந்தகிரி யேறிடுவீர்
கந்தகிரி யேறிஞான ஸ்கந்தகுரு கவசமிதை
பாராயணம் செய்துலகில் பாக்யமெலாம் பெற்றிடுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



ஆய கலைகள் அறுபத்து நான் கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை - தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்.

வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்க வென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாபமயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந் நாவின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராதென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமம் கல்வியுந்
தீஞ்சொற் பணுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலு மன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய்
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
 பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
 காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
 லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
 சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
 முன்கவி சொல்லவல்ல
நல்வித்தையுந் தநதடிமை கொள்
 வாய் நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதன் றொருகால
 முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
 சகல கலாவல்லியே.

சொற்கு பொருட்கு முயிராமெய்ஞ்
 ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
 நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
 டரசன்ன நாணநடை
கற்கும் பதாம் புயத் தாளே
 சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
 மேம்பட்ட மன்னரு மென்
பண்கண்ட ளவிற் பணியச் செய்வாய்
 படைப்போன் முதலாம்
விண்கண்டதெய்வம் பல்கோடியுண்டேனும்
 விளம்பி லுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
 சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்னை தந்தை பாதம் கும்பிடுவோம்

1. அன்னை தந்தை பாதம் கும்பிடுவோம்
என்றுமிவர்களைப் போற்றிடுவோம்.

2. இன்பமுடன் நாங்கள் வாழ்ந்திடவே எண்ணும்
அன்பு மனத்திற்கு ஈடுமுண்டோ.

3. கண்கண்ட தெய்வமெமக்கிவரே - இதை
எண்ணிமிக அன்பு செய்திடுவோம்.

4. நல்லவராக நடந்திடுவோம் - இவர்
சொல்லினைப் பொன்னென ஏற்றிடுவோம்

5. வல்லவராக வளர்ந்திடுவோம் - உயர்
கல்விதனை நன்கு கற்றிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சின்னஞ்சிறிய பிள்ளைகள் நாம்

1. சின்னஞ்சிறிய பிள்ளைகள் நாம்
சிறப்புமிக்க பிள்ளைகள் நாம்
பென்னம்பெரிய செயல் புரியப்
பிறந்திருக்கும் பிள்ளைகள் நாம்.


2. அன்னை தந்தை ஆசிரியர்
அன்பாய்க் கூறும் போதனைகள்
பொன்னெனவே தினமும் போற்றிப்
பூமியிலே நலம் பெறுவோம்

3. நல்லவர்களோடு சேர்ந்து
நற்பழக்கம் கொண்டிடுவோம்
நல்ல நூல்களைப் படித்து
நல்லறிவு பெற்றிடுவோம்

4. வல்லவர்க ளாய் வளர்ந்து
விரும்ப நன்மை செய்திடுவோம்
எல்லையில்லாக் கருணை கொண்ட
இறைவன் பாதம் தொழுதிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வண்ணத்துப் பூச்சி

1. வண்ண வண்ணப் பூவைத்தேடும்
வண்ணத்துப் பூச்சி
கண்ணைக் கவரும் அழகு கொண்ட
வண்ணத்துப் பூச்சி

2. தேனைக் குடித்து மகிழுகின்ற
வண்ணத்துப் பூச்சி
காணக்காண ஆசையம்மா
வண்ணத்துப் பூச்சி

3. புள்ளிப் புள்ளிச் செட்டை கொண்ட
வண்ணத்துப் பூச்சி
உள்ளம் மகிழ இங்கு வாவா
வண்ணத்துப் பூச்சி

4. அடித்துத் துன்பம் செய்ய மாட்டோம்
வண்ணத்துப் பூச்சி
பிடித்திடாமல் பார்த்து மகிழ்வோம்
வண்ணத்துப் பூச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொக்கு பறக்குது


1. கொக்கு பறக்குது கொக்கு பறக்குது
மிக்க பசியோடு நீரிலிறங்குது
பக்கத்திலே வந்த குஞ்சுமீன் கூட்டத்தைப்
பாராதது போலத் தூக்கமாய் நிற்குது

2. பார்த்த பெருமீன்கள் பயமேது மில்லாமல்
பக்கத்திலே நீந்தும் வேளையிலே
கூர்மிக்க சொண்டினால் கொத்தி விழுங்கியே
நீர்க்கரை மரத்தில் ஓய்வாய் இருக்குது

3. ஆரவார மின்றிக் காரியத்திற் கண்ணாய்
என்று முயர்வை அடைந்திடுவோம்
பாரினிலே சிறப்பாக வாழ்ந்திடுவோம்
பண்பாய்ப் பலர்க்கு முதவிசெய்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கோழி தரும் பாடம்

1. கொக்கரக்கோ எனக்கூவும் கோழிச்சேவல்
கொக்கொக்கொக் என்று கத்தும் பேட்டுக்கோழி
மிக்கராசா போலச் சேவற் கோழி முன்னாலே
மிடுக்காகவே நடந்து செல்வதழகுதான்

2. குப்பையை நன்றாய்க் கிளறிப் பேட்டுக்கோழி
குஞ்சுகளைக் கூப்பிடுதே ஏனென்று பார்ப்போம்
குப்பைக்குள்ளே மறைந்திருக்கும் உணவுவகைகளைக்
காட்டிக்கொத்தித் தின்னவைக்கும் காட்சியைக்காண்போமே

3. புத்தகங்களைப் புரட்டி ஆசிரியர் இதுபோல்
புதியபுதிய விடயங்களைச் சொல்லியே தருவார்
முத்தான கல்வியினால் நற்பயனடைவோம்
மேலான நல்லறிவால் நற்செயல் புரிவோம்

4. ஆசிரியர்களை என்றும் போற்றி செய்குவோம்
அவர் தந்திடும் வாழ்த்து உயர்வைத் தந்திடும்
நேசமாக எமைவளர்க்கும் தாய் தந்தையே
நேரினிலே கண்கண்ட தெய்வமுமவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயிலாரும் குயிலாரும்

மயிலார்:-

குயிலாரே குயிலாரே இங்குவாரும்
அழகாக என்னைப் போல ஆடுவீரா
அழகாக என்னைப்போல ஆடுவீரா



குயிலார்:-

ஓ கோ கோ அப்படியா
ஓ கோ கோ அப்படியா
மயிலாரே மயிலாரே இங்கு வாரும்
இனிதாக என்னைப் போலப் பாடுவீரா
இனிதாக என்னைப் போலப் பாடுவீரா



மயிலார்:-

ஓ கோ கோ அப்படியா
ஓ கோ கோ அப்படியா
பசுவாரே பசுவாரே இங்கு வாரும்
குயிலார் தன்னைப் புகழ்ந்து பாட்டுப் பாடுறார்
குயிலார் தன்னைப் புகழ்ந்து பாட்டுப் பாடுறார்

குயிலார்:-

பசுவாரே பசுவாரே இங்கு வாரும்
மயிலார் தன்னைப் புகழ்ந்து ஆட்டமாடுறார்
மயிலார் தன்னைப் புகழ்ந்து ஆட்டமாடுறார்

பசுவார்:-

மயிலாரே குயிலாரே சண்டைவேண்டாம்
மற்றவரின் திறமைதனை நன்கு மதிப்பீர்
எல்லோரும் எவற்றினிலோ வல்லவரேதான்
நல்லவராய் நாம் வாழ்ந்து நற்பணிபுரிவோம்
நல்லவராய் நாம் வாழ்ந்து நற்பணிபுரிவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குரு வணக்கம்
## (யோகர் சுவாமிகள்)

என்னையெனக் கறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடி யென் தலை வைத்தான் எங்கள் குருநாதன்
அன்னை பிதாக்குருவானான் எங்கள் குரு நாதன்
அவனியெல்லாள வைத்தா னெங்கள் குருநாதன்
முன்னை வினை நீக்கி விட்டா னெங்கள் குருநாதன்
பூலருக்கு மறிய லொண்ணா னெங்கள் குருநாதன்
நன்மை தீமை யறியாதா னெங்கள் குருநாதன்
நான் தானாய் விளங்குகின்ற னெங்கள் குருநாதன்

தேகம் நீயல்ல வென்றா னெங்கள் குருநாதன்
சித்தத்திற் றிகழுகின்ற னெங்கள் குருநாதன்
மோகத்தை முனியென்றான் னெங்கள் குருநாதன்
முத்திக்கு வித்தென்றா னெங்கள் குருநாதன்
வேகத்தை கெடுத்தாண்டா னெங்கள் குருநாதன்
விண்ணுமண்ணு மாகி நின்றான் னெங்கள் குருநாதன்
தாகத்தை யாக்கி விட்டா னெங்கள் குருநாதன்
சத்தியத்தை காண வைத்தா னெங்கள் குருநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டு என்று மகிழ்வதெல்லாம்
கேடுண்டு எனும்படி கேட்டுவிட்டோம் இனிக் கேள்மனமே
ஓடுண்டு கந்தையுண்டுள்ளே யெழுத்தைந்தும் ஓதவுண்டு
தோடுண்ட கண்டனடியார் நமக்குத் துணையுமுண்டே

*மாணிக்க முத்து வயிரப் பணிபூண்டு*
*ஆணிப்பொன் சிங்கா தனத்தி லிருந்தாலும்*
*காணித் துடலைநமன் கட்டியே கைப்பிடித்தால்*
*காணிப்பொன் கூடவரக்காண்கி லமே...*

*கற்கட்டு மோதிரநற் கடுக்கனரை ஞாண்பூண்டு*
*திக்கெட்டும் போற்றத் திசைக்கொருத்த ரானாலும்*
*பற்கிட்ட வேமனுயிர் பந்தாடும் வேளையிலே*
*கைச்சட்டங் கூடவரக் காண்கிலமே*

*கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந் துருகி*
*பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்பல் பச்சிலையா*
*லெண்ணுண்டு சாத்த எதிர்நிற்க வீச னிருக்கையிலே*
*மண்ணுண்டு போகுதை யோகெடு வீரிந்த மானுடமே.*

பிறவா திருக்க வரம்தரல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவா திருக்க மருந்துண்டு காணிது எப்படியோ?
அறமார் புகழ்த்தில்லை யம்பல வாண ரடிக்கமல
மறவா திருமன மேயது காண்நல் மருந்துனக்கே.
தவியா திருநெஞ்ச மேதில்லை மேவிய சங்கரனைப்
புவியார்ந் திருக்கின்ற ஞானா கரனைப் புராந்தகனை
அவியா விளக்கைப்பொன் னம்பலத் தாடியை ஐந்தெழுத்தாற்
செவியா மனீசெபித் தாற்பிற வாமுத்தி சித்திக்குமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக் கிரியை விளக்க வினாவிடை

**இறந்தவருக்கு கிரியை செய்வதன் அர்த்தமென்ன?**

இறந்தவர் மேலும் அவருக்கு வாழ்வுண்டு என்பதே அர்த்தமாகும்.

**இறந்த பின்பு அவருக்கு எங்கே வாழ்வு? எப்படி வாழ்வு?**

அவருக்கு சுவர்க்கத்திலும் நரகத்திலும் வாழ்வுண்டு. திரும்பவும் அவர் புவியிற் பிறந்து முன் வாழ்ந்தது போல் வாழும் வாழ்வு உண்டு. சுவர்க்க வாழ்வு இன்ப துன்பக் கலகலப்பான அனுபவம்.

**இறந்த பின்பு அவர் இங்கில்லை, அந்நிலையில் அவருக்குச் செய்வதை அவர் பெறுவதெப்படி?**

இறந்த பின்பு குறைந்தது முப்பத்தொரு நாள்வரை அதாவது அந்தியேட்டி வரை அவர் இங்கேதான் இருக்கிறார். அதாவது தான் விட்ட உடலினைத் தொடர்ந்து நீங்காமல் அருவமாய் இருந்து கொண்டிருக்கிறார். அந்நிலையில் உடலைத் தொடர்புபடுத்திச் செய்யுங் கிரியையின் பலனை மேலுலகத்திலுள்ள பிதிர்கள் என்ற தேவசாதியர் ஏற்று அவர் எங்கிருந்தாலும் அங்கங்கு சேரச் செய்கிறார்கள்.

**இக்கிரியைகளை அபரக் கிரியைகள் என்பதேன்?**

அவை இறந்த பின் செய்யப்படும் கிரியை என்பதனால் தான். அபரம் என்றால் பின் என்று பொருள்.

**அபரக் கிரியைகள் எவை?**

பிரேதக் கிரியை, சாம்பலள்ளுதல், அந்தியேட்டி, மாசிகம், ஆட்டைத் திதி, திவசம் என்பனவாம்.

**அபரக் கிரியைகள் உடலுக்காகவா, உயிருக்காகவா?**

உயிருக்காகவேதான், ஆனால் அந்தியேட்டிவரை உடல் தொடர்பில் வைத்தும், பிறகு தனியாகவும் உயிரைக் கருதிச் செய்யப்படும்.

**இக்கிரியைகளினால் உயிருக்கு நன்மை விளைவிப்பது எங்ஙனம்?**

இக் கிரியைகளால் உயிருக்கு இருவிதத்தில் நன்மை விளையும். தனது சரீரத்தை விட்டுக் கிளம்பிய உயிர் அதன்மேல் பெறவேண்டிய அனுபவங்களுக்கு உபகரிப்பது ஒன்று, படிப்படியாக அவ்வுயிர் சிவத்தன்மை பெறுவது ஒன்று.

**சிவத்தன்மை பெறுவது என்பது எங்ஙனம்?**

அபரக் கிரியைகளைச் செய்வதனால் உயிரின் பாவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்படியாக அதிகரிக்கப்படுகின்றன. அதற்குத் தக்க அளவு உயிரைப் பற்றியுள்ள மலபந்தம் விலகிக் கொடுக்கும். மலம் விலகுமளவுக்குச் சிவத்தன்மை சிறிது சிறிதாகப் பற்றும், கால அடைவில் சரியான பக்குவம் வாய்க்கும் போது முழுமையாக அது சிவத்தன்மை பெற்றுவிடும்.

**நினைவஞ்சலிகளில் அவர் சிவபதம் அடைந்துவிட்டார் என்றுதானே எல்லோரையும் குறிக்கின்றார்கள். அப்படியானால் கிரியைக்கு என்ன அவசரம்?**

அப்படிக் குறிப்பது ஒவ்வொருவரும் சிவபதம் அடைய வேண்டும் என்ற நல்ல விருப்பத்தினால் உரைப்பது உபசாரம் என்ற அளவில் கொண்டு உரிய கிரியைகளை முறைப்படி செய்ய வேண்டும்.

**பிரேதக் கிரியையில் கும்ப பூஜை, அக்கினி காரியங்கள் எல்லாம் செய்வதேன்?**

அவையெல்லாம் முன் சொல்லியவாறு இறந்தவரைச் சிவமாக்கும் முயற்சிகள்தான். கும்பங்களில் உருத்திரனையும் திக்குப் பாலகர்களையும் எழுந்தருள வைத்துப் பூசிக்கப்படுகின்றது. அக்னியிலும் சிவனை எழுந்தருள வைத்துப் பூசிப்பதனால் அவற்றிலுள்ள நீருக்கு சிவத்தன்மை உண்டாகும். அந்நீரினால் இறந்த உடலுக்கு நீராட்டுவதால் நீரிலுள்ள சிவத்தன்மை உடலிற் செறியும். அக்கினி சிவமாகப் பூசிக்கப்பட்டால் அதில் ஏற்பட்ட சிவத்தன்மை அந்த அக்கினியால் உடலை எரிக்கும்போது அதன் சிவத்தன்மை மேலும் அதிகரிக்க உதவும். உடலைவிட்டுப் பிரிந்தாலும் ஒருவகையில் அதன் தொடர்பு நீங்காதிருக்கும். உயிருக்கு அச் சிவத்தன்மை புரியும்.

**உடலை விட்டுப் பிரிந்த பின்னும் உயிர், உடல் தொடர்பு நீங்காதிருக்கிறது என்பதை விளக்க முடியவில்லையே! அதை எப்படி நம்ப முடியும்?**

அப்படியொரு தொடர்பு நீங்காதிருப்பதை நாங்கள் காட்சியால் காண முடியாது. காணும் பக்குவம் சாதாரணமாக எங்களுக்கு இல்லை. பக்குவம் உள்ளவர்கள் கண்டு சொல்லியுள்ளார்கள். அவர்கள் சொல்வதை நாம் அனுமானித்து இறந்தவர் உயிர் விடும்போது கிடந்த இடத்தில் அன்று தொடக்கம் இளநீர் அல்லது தண்ணீர் செம்பு வைப்பதுண்டு. எட்டு வைபவத்தில் அன்று அவர் விரும்பி அருந்திவந்த சகல உணவுப் பண்டங்களும் படைப்பதுண்டு. அங்கே பாடல் படிப்புகள் முடிந்தபின் படைத்தவற்றில் சிறிது எடுத்து முகட்டை நோக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவதுண்டு. இவையெல்லாம் இறந்தவர் தனது உடம்பு எரிந்த பின்னும் கூட உடல் இருந்த சூழலில் இருக்கிறார் என்பதை அறிவிக்கும் ஏதுக்களாகும்.

**அங்ஙனமாயின் அவர் சுவர்க்க நரகம் போவரென்றல்லவோ முதலிற் சொல்லப்பட்டது. இப்போது இங்கேதான் இருக்கிறார் என்பது இதற்கு மாறுபாடாய் இருக்கிறதே?**

அதற்கு இது மாறுபடாது. எங்ஙனமெனில் இப்போது சொல்லப்படுகின்ற இந்தத் தொடர்பு முற்றாக நீக்கப்பட்டதன் பின்புதான் இவர் சுவர்க்க நரகங்களுக்கு செல்வார். அந்தியேட்டியில் தான் அத்தொடர்பு முற்றாக நீக்கப்படும்.

**அந்தியேட்டியில் அது நீக்கப்படுவது என்பது எப்படி?**

அந்தியேட்டி கிரியையை அவதானிப்பதால் அது புலனாகும். அந்தியேட்டி கிரியைக்கு அமைக்குமுகமாக கோடிட்ட மண்டபத்தில் தென்கிழக்கு மூலையில் ஐந்து நிறங்கள் உண்டு. அதில் ஒவ்வொரு நிறமும் பஞ்ச பூதங்களில் ஒவ்வொன்றைக் குறிக்கும். பஞ்ச பூதங்களினால் அமைந்த உடம்பால் அவர் தொடர்புற்றிருந்தார் என்ற உண்மையின் அடிப்படையில் மாவடிவான சதுரங்களில் பஞ்ச பூதங்களைப் பொருத்தி அவ்வப் பூதங்களுக்குரிய தெய்வங்களைப் பூசித்து அவற்றின் கருணையால் அவருக்கு அப்பூதங்களோடு இருந்த தொடர்புகளை நீக்கி விடுவது அக்கிரியையின் விளக்கமாகும்.

**அந்தியேட்டியில் தர்பபையில் ஆளுருவம் செய்து குளிப்பாட்டி பொற்சுண்ணம் இடித்து சுடுகிறார்களே அது ஏன்?**

அதுவும் அந்தியேட்டிவரை உயிருக்கு உடல் தொடர்பு இருக்குமென்பதற்கான மற்றொரு அறிகுறிதான்.

**சிலருக்கு மட்டும் பிரேதக் கிரியையோடு அந்தியேட்டியும் செய்கிறார்கள் அது ஏன்?**

அதையும் அறியத்தான் வேண்டும். சாதாரணமாக நம்மவரைப் போலல்லாது சிலர் விஷேசமான தீஷை ஆசாரம், ஒழுக்கம், சாதனை, சிவபூசை ஒழுங்குக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு விஷேட பக்குவம் இருக்கிறது. அந்த வாய்ப்பினால் அவர்கள் இறந்த உடனேயே தேகத்தால் அப்படி நிகழ்கிறது.

**அஃதிருக்க பிரேதக் கிரியையிலும் அந்தியேட்டியிலும் பொற்சுண்ணம் இடிக்கிறார்கள். அது எதற்காக?**

அதுவும் அவர் உடல் தொடர்புள்ளவராயிருத்தலிற் சம்பந்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய தநு, கரணம், புவனம், போகம் எல்லாவற்றையும் இடித்து நொறுக்கி இல்லாமற் செய்தல் என்ற கருத்தில்தான் செய்யப்படுகிறது.

**பொற்சுண்ணமிடிக்கையில் திருவாசகத்தில் இருக்கும் திருப்பொற்சுண்ணப் பதிகமும் படிக்கிறார்களே அது ஏன்?**

பொற்சுண்ணமிடித்தலினால் இறந்தவருடைய தேகத்தின் தொடர்பு நீக்கப்பட அவர் சிவலோகஞ் செல்லத் தகுதியாகின்றார். அப்படி அவர் சிவலோகஞ் சேரும் பட்சத்தில் அவருக்கு அங்கு வரவேற்பு நிகழும். அந்நிகழ்ச்சியைப் பிரதிபலிக்கும் ஓசை போலவும் பொருள் விளக்கமும் திருப்பொற்சுண்ணப் பதிகப்பாடல்களில் உண்டு. அதனாலேயே திருப்பொற்சுண்ணமிடிக்கும் நிகழ்ச்சியோடு இதுவும் தொர்புபட்டிருக்கிறது. உண்மையில் சிவலோகஞ் சேரும் தகுதியுள்ளவர் விஷயத்தில் அது என்றாலும் பரவாயில்லை. ஏனெனில் இவர்களும் எப்பவோவெனினும் தமக்குரிய காலத்திற் சிவலோகமடைய வேண்டியவர்களே. அது திருத்தத்திற்கு சிறந்த வழி என்பது விளக்கநிலை.

**அந்தியேட்டி முடிவில் வீட்டுக்கிரியை செய்வதேன்?**

அந்தியேட்டி முடிவில் இறந்தவரது வீட்டில் நக்னதானம், ஏகோதிட்டம், பசுதானம், சபீண்டிகரணம் முதலிய பல கிரியைகள் நிகழும். இவையெல்லாம் பொதுவில் வீட்டுக் கிரியைகள் எனப்படும். அந்தியேட்டியில் தேகத் தொடர்பு நீக்கப் பெற்றவர் தான் சுவர்க்க நரகத்துக்கு செல்வார். அவ்வாறு செல்லும் அவர் பாதை தனிமையானது, இருளானது, விக்கினங்களோடு கூடியது. ஆதலால் அவ்வித கஸ்டங்களில் இருந்து அவருக்கு விமோசனமளிக்கும் நோக்கில் வீட்டுக் கிரியைகள் நிகழ்கின்றன. கிரியைகளில் குடை, செருப்பு, விளக்கு, செம்பு தண்ணீர் முதலியன எல்லாம்கொடுப்பது, அவ்வசதிகள் வேண்டியிருக்கும் பாதையில் அவை அவருக்கு உதவட்டும் என்பதனால்தான்.

**வீட்டுக்கிரியை அழைப்பிதழ் சிலர் சபீண்டிகரணக் கிரியை என்று மட்டும் குறிக்கிறார்களே அது ஏன்?**

அது வேறொரு விஷேஷத்தினாலுமல்ல. வீட்டுக் கிரியையின் பகுதிகள் என மேற்சொன்னவற்றிற் சபீண்டிகரணம் பிரதானமானது என்பதனால்தான். எங்ஙனமெனில் இறந்தவர் மேற்குறித்த கஷ்ட வழியெல்லாந் தாண்டிப் போய் தன் சுவர்க்க நரகப் பேறுகளைப் பெறுவதற்கு முன் கூறிய பிதிர்களின் சகாயம் வேண்டும். அதற்காக அவர் பிதிர்களோடு சேர்க்கப்பட வேண்டும். பிதிர்களுக்கு அறிகுறியாக மாவுடன் எள், அரிசி, தேன், சர்க்கரை, தயிர் குழைத்து உருட்டிய பிண்டங்களையிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து அவற்றுக்கெதிர் இறந்தவர்க்கு அறிகுறியாக ஒரு பிண்டமிட்டு, கிரியை செய்பவர் எல்லோரையும் நைவேத்தியம் கதலிப்பழ தாம்பூலம் எல்லாம் சமர்ப்பித்து தூப தீபாராதனை செய்து முடிவில் இறந்தவரைக் குறிக்கும் பிண்டத்தை மற்றப்பிண்டங்களோடு ஒன்றுசேர்த்தல் காரணமாக இது சபீண்டிகரணம் எனப் பெயர் பெற்றது.

## அபரக்கிரியைகள்

ஒருவர் இறந்தபின் அவரது நன்மை கருதி அவரது பிள்ளைகள் முதலியோரினால் செய்யப்படுங் கிரியைகள் அபரக்கியைகள் எனப்படும். அபரம்-பிந்திய எனப் பொருள்படும். கிரியைகள் செய்வதனால் இறந்த ஆன்மா பாவங்களினின்றும் நீங்கி, சிவத்துவம் அடையும் என்பது நம்பிக்கை. தாய்தந்தையர்க்குச் செய்ய வேண்டிய கடமைகளை அவர்கள் உயிருடன் இருக்கும் போதும், இல்லாத போதும் பிள்ளைகள் தவறாது செய்தல் வேண்டும். அபரக்கிரியைகளின் பனைச் சிவாகங்களும், புராண இதிகாசங்களும் விளக்குகின்றன.

தாய்தந்தையரைப் பேணாது கடவுளை வழிபடல் பயன் தரா என்பது கௌசிகர் வரலாறு மூலம் அறியலாம். அவர்களை வழிபடுவதாகிய ஒரு புண்ணியமே ஒரு பிறப்புக்குப் போதியதாம்.

இல்லறத்தார்க்குரிய முக்கிய ஐவகைக் கடமைகளில் பிதிர்க் கடன் முக்கியமானதாலேயே திருவள்ளுவர் அதனை "தென்புலத்தார்" என முதலிய கூறியுள்ளார். பிதிர்கடன் செய்தோர் பெரும் பேறுகளும் சித்திகளும் பெறுவர். சிவ அருளுக்கு ஆளாவர். பிதிர்க்கடன் செய்யாதோர் தீமைகள் நேரும்.

அபரக் கிரியைகள் வகை:

இவை தகனக்கிரியை, அந்தி சஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசியம், சிராத்தம் எனப்பல பகுதிகளை உடையன. இவைகள் உத்திர கிரியை, சிராத்தக் கிரியை எனவும் அழைக்கப்படும். தீச்சை பெற்றோரே சைவர் என்று சொல்லும் தகுதி பெற்றவர். தீட்சை பெற்றோருக்கு மாத்திரம் சைவக் கிரியைகள் செய்யப்படும். உயர்ந்த நிலையிலுள்ள சிவடியார்கள் சிவனேயாவர். அவர்களுக்குரிய உத்தர கிரியைகள் வழிபாடாக நடைபெறும். அவர்கள் சிராத்தம் குருபூசையாக நட்சத்திரநாளில் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணக்கிரியைகள்:

சுத்த சைவர்களுக்குச் செய்யும் தகனக்கிரியையில் மூன்று பகுதிகள் உள.

அவையாவன– பேரிகையடித்தல், உடற்சுத்தி, ஆன்மசுத்தி என்பனவாம்.

பேரிகையடித்தல் :

ஆசாரியர் புண்ணியாகம் செய்து அந்த நீரினால் இடத்தையும் பொருளையும் சுத்தி பண்ணி, மேளத்திலே பிரமா, விஷ்ணு, உருத்திரன் முதலிய மூர்த்திகளைப் பூசித்து மேளமடிப்பர். மேளமடிக்கும் போது சொல்லும் மந்திர வாக்கியத்தின் பொருள் "இறந்த ஆன்மா நன்மையடை வேண்டும் எனவும், பூமியிலும் மறு உலகங்களிலும் உள்ள யாவரும் வாழவும், அசுரர் போன்ற கொடியோர் அடங்கவும், சகல உயிரினத்திற்கும் ஐசுவரியம் உண்டாகவேண்டும்; மிருகம், பறவை முதலிய உயிரினத்திற்கும் நன்மை உண்டாக வேண்டும் எனவும் உமாதேவியார் கட்டளைப்படி பேரிகை அடிக்கிறேன். சிவபெருமான் இதனை இரட்சிக்க" என்பதாகும். (இன்று ஆசாரியர் இதனை அடிப்பதில்லை. இதற்கு அறிகுறியாக மணியை மாத்திரம் அடிக்கின்றார்.)

உடற்சுத்தி :

சிவாசாரியர் பந்தலின் நடுவில் சிவகும்பமும், உருத்திர கும்பமும் வைத்து அவற்றின் முன் ஓமாக்கினியை வளர்த்து சிவனையும் உருத்திரனையும் வழிபடுவர். எண்ணெய், பஞ்ச கவ்வியம், இளநீர், மஞ்சள் நீர், சிவகும்ப நீர் ஆகியவைகளில் இறந்தவர் உடலை நீராட்டிச் சுத்தி செய்து, புத்தாடை புனைந்து நீறு சாத்தி, பூச்சூடி, பிரணவாசனமான தர்ப்பையின் வைப்பர்.

சிவாசாரியர் பஞ்சசுத்திகளையும், சகளீகரணத்தையும் செய்து அக்கினி வளர்த்து, அட்டதிக்குத் தேவர்களையும் சிவனையும் வழிபட்டு, அவர்களின் ஆசீர் வாதத்தையும் பெறுவார். கும்பத்திலிருந்து சிவனை உடலின் மீது எழுந்தரும் படி வேண்டி வழிபாடு செய்வார். இருதயத்தில் ஆசனபூசை செய்து ஆன்மாவை அதில் அமைத்து, அதில் பஞ்சப்பிரம மந்திரங்களை பதித்து. அதன் இருதயத்தில் சிவனை ஆவாகனஞ் செய்து கொள்வார். பின்னர் ஆசிரியர் இறந்தவரின் நித்திய அனுட்டானக் குற்றங்களை தீர்கக ஆகுதி செய்து அவ்வுடலுக்கும் தனக்கும் நாடிசந்தானம் செய்து, அழைக்கப்பட்ட ஆன்மாவை தன் இருதயத்திற்கு கொண்டு வந்து, உருத்திரனை தியானித்து பூரணாகுதியுடன் உருத்திர மூர்த்தியை அடையும் வழயில் விடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுண்ணம் இடித்தலும் பந்தம் ஏற்றுதலும்

பாவங்களை நீக்குதற்காகச் சுண்ணம் இடிக்கப்படுகின்றது. பாவங்கள் அகன்றதும் திருவருள் உண்டாவதற்காகப் பந்தம் ஏற்படும். இவைகளைத் தொடர்ந்து திருமுறைகள் ஓதப்பெறும்.

### சுடலை சேர்த்தல்:

உடலைச் சுடலைக்கு எடுத்துச் செல்லும்பொழுது அட்டதிக்கு தேவர்களின் ஆசியைப் பெறுவதற்காக வழியிலே நெற்பொரிதூவப்படும், (சைவாசாரமுள்ள ஒருவரே இதனைச் செய்யத்தக்கவராவர்.) ஓமாக்கினியிலிருந்து உருத்திரனை ஆவாகித்த சிவாக்கினியும், கும்பமும் உடன். எடுத்துச் செல்லப்படும். சுடைலையில் நான்குமுழ நீளம், இரண்டுமுழ அகலமான இடத்தில் மஞ்சள் குங்குமம் இட்டு விறகு அடுக்கப்பட்டிருக்கும் இடம் சிதார்த்தானம் என்று பெயர் பெறும். இச் சிதாத்தானத்தில் அடுக்கப்பட்ட விறகினைச் சுற்றி வந்த அதன் மீது உடலை வைத்து தற்புருட மந்திரம் சொல்லி நீரையும் அரிசியையும் இறந்தவர் வாயில் இடுவர்.

### தீயிடல்:

கும்பத்துடனும் சிவாக்கினியுடனும் உடலைச் சுற்றிவந்து கும்பநீரை உடலுக்குத் தெளித்து குடத்தை முன்பாக நிலத்திற் போட்டுச் சிவாக்கினியை விறகின்கண் இட்டு எரியச்செய்வர். கொள்ளி வைத்தவர் பின் நீர்க்கரையில் நீராடி வீடு செல்வர். தீ இடும்பொழுது "அக்கினிதேவனே பரிசுத்தமாயிருக்கின்ற உடலின் மந்திரத்தாலுண்டான பூரணாகுதியை ஏ்றுக் கொள்ளுடும்" என நினைத்துக்கொண்டே தீ இட வேண்டும்.

### அத்தி சஞ்சயனம்:

அத்தி சஞ்சனம் என்பது எரிக்கப்பட்ட உடலிலிருந்து எலும்புகளையும், சாம்பலையும் எடுத்துப் புண்ணிய நீரில் எலும்புகளையும், சாம்பலையும் எடுத்துப் புண்ணிய நீரில் சேர்த்தலாகும்ட. அத்தி – எலும்பு, சஞ்சயனம் – கரைத்தல், இஃது கால், தொப்பூழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய இடங்களில் உள்ள பாத்திரத்தில் இட்டுக்கொண்டு புண்ணிய நீரில் சேர்த்து விபாடு செய்யலாம். அத்தியைப் புண்ணிய தீர்த்தத்தில் இடுவதினால் ஆன்மா புண்ணிய உலகம் அடையும் என்பது பொருள். சாம்பல் அள்ளுதல் என்று இன்று கூறப்படுவது இதுவேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்னதானம்:

இது தகனக் கிரியை முடிந்தபின் இறந்தவரின் பசி, தாகம் முதலியவற்றை நீக்கும்பொருட்டுக் குடும்பத்தாரால் ஆசாரியருக்கு ஆடை, அரிசி முதலியவற்றைத் தானமாகக் கொடுத்தல்.

அந்தியேட்டி:

இது ஆசௌசக் கடைசியில் செய்யப்படும் யாகம் எனப்பொருள்படும். அந்திய - கடைசிநாள்; இட்டி - யாகம், இறந்தவரின் ஆன்ம சித்திக்காக இது நடைபெறுகிறது. இறந்தவரின் சமய அனுட்டானத்திலுள்ள குற்றங்கள் இதனால் தீரும். புண்ணிய நீர்க்கரையில் நிகழுங் கிரியை இதுவாகும். இதனால் இதனை நீர்க்கடன் என்றும் கூறுவர் .

பாடாண பூசை:

(பாக்ஷாண பூசை). ஒரு கல்லை வைத்து, இறந்தவரின் ஆன்மாவை மந்திரத்தால் வருவித்து அதற்குச் செய்யும் பூசை. இப்பூசையினாலும் அதற்குத் திருப்தியும், மற்றவைகளால் ஆன்மாவின் குற்றநீக்கமும் உண்டாம்.

ஏகோதிட்டம்

ஆசௌசம் நீங்கிய அடுத்தநாள் இறந்தவருடையை ஆன்ம சுத்திக்காகவும், நற்கதியடையும் பொருட்டும் செய்யப்படும் கிரியை. இக்கிரியையில் இருக்கும் ஆசாரியரை இறந்த ஆளாகப் பாவனை செய்து, அவருக்கு ஒரு ஆண்டுக்குப் போதுமானளவு பொருட்களைத் தானமாகக் கொடுத்து, ஒரு வருடம் முடியும் வரை எதிர்படாமல் இருக்கச் செய்தல், தானமாகக் கொடுக்கப்படவேண்டிய பொருட்கள் உணவுப் பொருட்கள், உடை, திருநீற்றுப்பை, செபமாலை, குடை, மிதிதடி, பொன் முதலியவையாம்.

சபிண்டீகரணம்:

ஏகோதிட்டத்திற்கு அடுத்த நாளிலே பிதிர்தேவர்களோடு இறந்தவரைச் சேர்த்தற்கு நடைபெறும் கிரியை. சபிண்டீகரணத்தால் ஆன்மா சுத்திபெற்றுச் சிவலோகம் சேரும். இக்கிரியை பிண்டமிட்டுச் செய்வதனால் இது சபிண்டீகரணம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எங்கள் வாழ்க்கைக்கு ஒளி விளக்காய், வாழ்வின் வழிகாட்டியாய் வழிநடாத்திய எம் இனிய குடும்பத்தலைவி அமரர் பொன்னம்பலம் நல்லம்மா அவர்களின் இன்னுயிர் பிரிவு கேட்டு விரைந்து வந்து எமக்கு ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்களிற்கும் தொலைபேசி மூலம், துண்டுப் பிரசுரம் மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும், அன்னாரின் மரணச்சடங்கிலும் இறுதி யாத்திரையிலும் பங்குபற்றி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இறுதிக்கிரியைகள், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற உதவி புரிந்த அந்தணப் பெருமக்களுக்கும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், இந்நினைவு மலரை அழகுற அச்சிட்டுத் தந்த மட்டுவில் ரம்யன் அச்சகத்தாருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியை நவில்கின்றோம்.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமும் ஆகும்.



பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



Ramyan Printers Madduvil. 0773471022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org